**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 63/2017**

20.02.2025

**<u>வா.சா. 1 கோவிந்தராஜன் த/பெ. வாசுதேவ நாயுடு அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

2ம் பிரதிவாதி என் மீது தாக்கல் செய்திருந்த அசல் வழக்கு எண் 23/2015 ல் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண் 94/2015 வழக்கறிஞர் மூலம் ஆஜாகி எதிருரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிருரை மற்றும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு அதன் அடிப்படையில் கடந்த 29.04.2015 ம் தேதி மேற்படி இடைநிலை மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் 1ம் பிரதிவாதி கொடுத்த சான்று மோசடியாக கொடுக்கப்பட்டது என்பதை பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். இடைகால மனு எண் 94/2015 ல் சமுக நீதிமன்றம் வழங்கிய உத்தரவை எதிர்த்து திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு எண் 5/2015 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு மனுவில் இந்த நீதிமன்றம் வழங்கிய உத்தரவு சரியானது என்று மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு 02.02.2017 ல் உத்தரவு வழங்கப்பட்டது என்றால் சரிதான். திருவாரூர் மாவட்ட நீதிமன்றம் மேல்முறையீட்டு மனு எண் 5/2015 யை தள்ளுபடி செய்யப்பட்ட பின்பு அந்த உத்தரவுக்கு எதிராக எந்த ஒரு மேல்முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரங்கள் அனைத்தையும் இந்த வழக்கில் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எந்த விபரமும் சொல்லவில்லை என்றும் அந்த விபரங்கள் அனைத்தையும் மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு எதிராக கூறியுள்ள விஷயங்கள் உண்மையாக இருந்திருந்தால் நான் மேல்முறையீடு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதியின் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்றும் அதன் காரணமாக தான் திருவாரூர் மாவட்ட நீதிமன்ற மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்த பிறகு சமுக நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழங்கிய ஆவணத்தின் அடிப்படையில் தான் இடைநிலை மனு எண் 94/2015 ல் இந்த நீதிமன்றம் உத்தரவு வழங்கியது என்று என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறியது போல் 1ம் பிரதிவாதி வழங்கிய ஆவணத்தின் அடிப்படையில் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றாலும் அனைத்து ஆவணங்களையும் பரிசிலனை செய்து தான் உத்தரவு வழங்கியுள்ளது என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.02.25 15:31:11 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.